www.tamilarangam.net




# கிணறுகளில் மிதந்த பிணங்கள்

யாழ்ப்பாணம் செம்மணி புதைகுழிகள் இரகசியமாக தோண்டப்பட்டு இருக்கலாமோ? அங்குள்ள தடயங்கள் மறைக்கப்பட்டு இருக்கலாமோ? என்ற சந்தேகம் பரவலாகி இருக்கிறது.

இத் தொடரில் மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் படுகொலைகள் பற்றிய தகவல்களை படித்த பின்னர் சத்துருக்கொண்டான் அனுபவம் செம்மணியிலும் பின்பற்றப்பட்டுள்ளதோ என்று சந்தேகம் வலுப்பெற்றுள்ளதாக பலூ நண்பர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

1990 ஜூன் மாதம் 10ம் திகதி சத்துருக்கொண்டானில் படுகொலையான பலர் இன்றுவரை காணாமல் போனோர் பட்டியலில்தான் இருக்கின்றனர்.

"செம்மணிப் புதைகுழி விவகாரம் அம்பல மாகிவரும் இத்தருணத்தில் சத்துருக்கொண்டான் படுகொலைகள் பற்றிய தகவல்கள் வெளியானது மிகப் பொருத்தமே. ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறவில்லை என்பது ஆதாரபூர்வமாக அம்பலமாகிறது" என்று பலரும் கடிதங்கள் மூலம் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே கிழக்கு மாகாணத்திலுள்ள வணபிதா ஒருவர் உட்பட சிலர் தொடர்பு கொண்டு பற்றீஷியா லோறன்சின் கடிதத்தை முழுமையாக பிரசுரிக்கத் தவறிவிட்டதாக கூறினார்கள். அமெரிக்காவில் இருந்து வந்த மனித வர்க்கவியல் ஆய்வாளரான பற்றீஷியா லோரன்ஸ் என்ற பெண்மணி 1991 முதல் 94 வரை மட்டக்களப்பில் தங்கியிருந்தவர்.

மட்டக்களப்பு மக்களின் விருந்தோம்பலில் தன் மனதைப் பறிகொடுத்தவர்.

சத்துருக்கொண்டான் படுகொலைகள் தொடர்பான உண்மைகளைப் பேச முடியாத பயங்கர சூழ்நிலையிலும், பற்றீஷியா மட்டுமே துணிந்து நின்று, தான் அறிந்த உண்மைகளை அறிக்கையிட்டார்.

அவரது அறிக்கையை முழுமையாக பிரசுரித்தால்தான் திடுக்கிடும் உண்மைகள் அம்பலமாகும் என்பது அவர்கள் கூறிய கருத்து.

வடக்கு-கிழக்கில் காணாமல் போனோருக்கான ஜனாதிபதி ஆணைக்குழுத் தலைவரான ஒய்வுபெற்ற நீதியரசர் திரு.பாலகிட்னருக்கு பற்றீஷியா லோரன்ஸ் எழுதிய கடிதத்தின் மிகுதிப் பகுதி இதோ:

## சிக்கிய புடவை

சத்துருக்கொண்டானில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பான தகவல்கள் பரவியதால் கேணல் பேர்சி பெர்னாண்டோவுடன், தப்பி வந்த 21 வயது இளைஞனும் மட்டக்களப்பு சமாதான சபையைச் சேர்ந்த ஒருவருமாக- 1990 ஜூன் 10ம் திகதி சத்துருக்கொண்டானுக்குச் சென்றனர்.

குறிப்பிட்ட படுகொலைக்குட்படுத்தப் பட்டவர்களின் சடலங்கள் எங்கே வீசப்பட்டன என்பதை நிர்ணயிக்கவே இவர்கள் அங்கு சென்றார்கள். அவ்விளைஞன் ஏற்கனவே தாக்கப்பட்டமையினால் ஏற்பட்ட காயங்களினாலும் பல கொடூரச் சம்பவங்களை நேரடியாகவே பார்த்தமையினாலும் மனம் பேதலித்த நிலையிலிருந்தான்.

இதனால் அவனால் எந்த இடத்தையும் சரியாகச் சுட்டிக் காட்ட முடியவில்லை. ஆகவே அவனால் கூறப்பட்ட எத்தகைய சம்பவமும் அங்கு நடைபெற்றமைக்கான ஆதாரங்கள் இருக்கவில்லை என்று சமாதான சபை உறுப்பினரைக் கொண்டு இராணுவ அதிகாரி ஒர் அறிக்கையினை ஒப்பமிட்டுப் பெற்றுக் கொண்டார்.

இவ்வறிக்கையில் ஒப்பமிட்டவரான சமாதான சபையின் தலைவராகவிருந்த திரு.ரி.அருணகிரிநாதன் தமது தலைமைப் பதவியிலிருந்து உடன் விலகினார்.

ஒரளவு பலவந்தமாகப் பெறப்பட்ட கையொப்பத்தைத் தொடர்ந்து சத்துருக்கொண்டான் 'சிறுவர் இல்ல' இராணுவ முகாம் பொறுப்பதிகாரிகளாகத் தொடர்ந்து பதவிவகித்த மூன்று அதிகாரிகளும்கூட அங்கு படுகொலைகள் நடைபெறவேயில்லை என்று தொடர்ந்து கூறுவதற்கான காரணமாகிவிட்டது.

இச்சம்பவம் நடைபெற்ற அடுத்த வருடம் உயிருடன் தப்பியிருந்த மக்கள் அகதி முகாம்களிலிருந்து தத்தமது வீடுகளுக்குச் சென்று குடியேறத் தொடங்கினர்.

அப்போது அவர்களுக்கு மற்றுமொரு புதிய சிக்கலை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. சத்துருக்கொண்டானில் குடியேறியவர்களில் ஒருவர் தனது வீட்டு வளவிலிருந்து குடிநீர்க் கிணற்றைத் துப்புரவு செய்ய முயன்றார். ஒரு தடியினை கிணற்றுள் செலுத்தியபோது அதில் ஒரு புடவை சிக்கியது. தொடர்ந்து ஒரு மனித எலும்புக் கூடும் தட்டுப்பட்டது. இதே போன்று அங்கிருந்த பல கிணறுகளுக்குள் ஏற்கனவே கொலை செய்யப்பட்டோரின் சடலங்களும் எலும்புக் கூடுகளும் கிடந்தன.

கிராமசேவகர் மூலமாக உதவி அரசாங்க அதிபருக்கும் பின்னர் மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்கும் முறைப்பாடுகள் அனுப்பப்பட்டன. அக்கிணறுகளை உடனடியாக மூடிவிடுமாறு ஆலோசனை கூறப்பட்டது.

அக்கால கட்டத்தில் பொதுமக்கள் மத்தியில் நிலவிய பயம் காரணமாக பல உண்மைச் சம்பவங்கள் வெளிப்படமுடியவில்லை. ஆயுதப் படையினர் பற்றிய குற்றச் சாட்டுக்களை வெளியிட்டால் அவர்களால் மென்மேலும் ஆபத்துக்கள் தங்களுக்கு ஏற்படக்கூடும் என்று அவர்கள் அஞ்சினர். குடி தண்ணீர்க் கிணறுகள் பற்றிய உண்மைகள் வெளியுலகுக்குத் தெரியாமல் மறைக்கப்பட்டதற்குமாக முக்கிய காரணம் இதுதான்.

கிணறுகளுக்குள் குறிப்பாக பெண்களின் சடலங்கள் அதிகமாகக் காணப்பட்டமைக்கான காரணம் எதுவாக இருக்கலாம் என்று அம்மக்களிடம் கேட்டேன். அவர்கள் இரு காரணங்களைச் சொன்னார்கள்:

(அ) கொலை செய்தவர்கள்-கொலை செய்யப்பட்டமைக்கான ஆதாரங்களை மறைப்பதற்காக- அல்லது -

(ஆ) பாலியல் வல்லுறவுக்குப் பயந்து தற்கொலை செய்திருக்கலாம்.

## ஆண்கள் இல்லை

சத்துருக்கொண்டான், கொக்குவில், பன்னிச்சையடி மற்றும் பிள்ளையாரடி ஆகிய கிராமங்களில் வாழ்ந்த மக்கள் பெரும்பாலும் மிகவும் வறியவர்கள். தங்கள் அன்றாட உணவுக்காக உழைத்து வந்த ஆண்களைப் பறிகொடுத்துவிட்ட நிலையில் வாழ்க்கை நடத்துவதற்கே பெரும் கஷ்டப்பட்டனர். வன்முறை காரணமாக இறந்தவர்களுக்கான கொடுப்பனவுகளைப் பெறுவதற்காக- உண்மையான காரணங்களைக் கூறினால் இராணுவத்தினரின் தாக்குதலுக்குட்பட வேண்டிவரும் என்பதற்காக, மோதல்களின்போது தற்செயலாகத் தாக்குண்டு இறந்து போனார் என்பது போன்ற காரணங்களைக் காட்டினார்கள். இதனாலும் படையினரின் நீதிக்குப் புறம்பான நடவடிக்கைகளில் இறந்தமைக்கான பல ஆதாரங்கள் இல்லாமற் போய்விட்டன.

படுகொலைகள் நடைபெற்ற சத்துருக்கொண்டானில் சில இடங்களில் குழிகள் தோண்டப்பட்டு அங்கிருந்து எலும்புகளை படையினர் சேகரிப்பதைத் தாங்கள் கண்டதாக, 1994 மே மாதத்தில் சில தன்னாமுனைவாசிகள் கூறினர். (இரு கிராமங்களுக்குமிடையில் ஒருமைல் தூரம்கூட இருக்காது. கிராமங்களுக்கிடையில் எல்லையாக இருப்பது பரந்த வயல்கள். இதனால் ஒரு கிராமத்தில் நடப்பதை மற்றக் கிராமத்திலிருந்து பார்த்தால் கண்டு கொள்ள முடியும்)

இவ்வாறு சேகரிக்கப்பட்ட எலும்புகளின் குவியல்கள் இருதடவைகள் எரிக்கப்பட்டுச் சாம்பலாக்கப்பட்டதாகவும் அவர்கள் கூறினார்கள்.

## மறக்க முடியுமா?

சத்துருக்கொண்டானில் 'காணாமற்போனவர்கள்' தொடர்பாக மேற்கொண்டு விசாரணைகள் ஏதாவது நடத்தப்பட்டதா, என்று அப்பதவிக்கு அப்போது நியமிக்கப்பட்டிருந்த பிரிகேடியர் ரோஹன் குணவர்த்தனவிடம் கேட்கப்பட்டது.

மனித உரிமைகள் இயக்க நடவடிக்கையாளர்களே இவ்வினாவை எழுப்பினர்,

மட்டக்களப்பிலுள்ள குறிப்பிட்ட முகாமில் அத்தகைய கொலைகள் எதுவும் நடந்ததாகதான் அறிந்தமட்டில்- ஆதாரமில்லை என்று கூறிவிட்டார். அத்துடன் ஓர் அறிவுரையையும் பிரிகேடியர் தெரிவித்தார். "பழையனவற்றை மறப்போம், இனிமேல் நடக்க வேண்டியவற்றைக் கட்டியெழுப்புவோம்!"

வரலாற்று ரீதியான உண்மைகள் பலவற்றை மறுப்பதற்கான அதிகாரம் பிரிகேடியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால் இத்தகைய கொடுமைகளை அனுபவித்த மக்களின் நினைவுகளிலிருந்து அவை மறைந்து போகப் போவதில்லை.

தன்னாமுனை போன்று இலங்கை முழுவதும் பல கிராமங்களில் எத்தனையோ கொடுமைகள் நடைபெற்றுள்ளன. இவற்றை அனைத்து மக்களும் அறியக் கூடியதாக இருந்தால், இனிமேல் வரப்போகும் காலங்களிலாவது இக்கொடுமைகள் நடைபெறாமலிருப்பதற்கான சூழ்நிலைகள் ஏற்படலாம்.

ஏராளமான அப்பாவிப் பெண்களையும் சிறார்களையும் வயதானவர்களையும் சத்துருக்கொண்டானில் கொன்று குவித்த நீதிக்குப்புறம்பான நடவடிக்கைகளுக்கான உண்மைகள் மறைக்கப்பட்டு வருகின்றன.

அகதிகளை தன்னாமுனையிலுள்ள கத்தோலிக்க கன்னிகாஸ்திரிகள் பாதுகாத்து வந்துள்ளனர். சத்துருக்கொண்டான் படுகொலைகளுக்கான ஆதாரங்களை இவர்கள் கண்டிருக்கிறார்கள். (16 வருடங்களாக மூடப்பட்டுக் கிடந்த சத்துருக்கொண்டான் கண்ணகை அம்மன் கோவில் 1995 மார்ச் மாதம் மீண்டும் திறக்கப்படவுள்ளது) இவ்வாலய பக்தர்களும் சிலரும் ஆதாரங்களைக் கண்டுள்ளனர். இவர்களை அணுகி உண்மையான ஆதாரங்களைப் பெறுமாறு நான் ஆலோசனை கூறுகிறேன்.

## கண்ணகி வழிபாடு

இலங்கையிலும் உலகின் வேறுபல பாகங்களிலும் பத்தினி கண்ணகி வழிபாடு வரலாற்று ரீதியாக பரம்பரை பரம்பரையாக நிலவிவரும் பண்பாடாகும். இலங்கையில் தமிழர்களும் சிங்கள மக்களும் கண்ணகியைப் பயபக்தியுடன் வழிபட்டு வருகின்றனர்.

களத்தில் நான் எனது ஆய்வுகளை மேற்கொண்டிருந்த காலத்தில் ஏழ்மை நிலையிலுள்ள ஒரு பெரிய சிங்களக் குடும்பத்தைச் சேர்ந்த அரசுபடைச் சிப்பாய் ஒருவரை அடிக்கடி காண நேர்ந்தது.

இவர் மட்டக்களப்பிலுள்ள பல கிராமங்களில் பணியாற்றிவரும் காலத்தில் ஆங்காங்கேயிருந்த கண்ணகி ஆலயங்களில் சென்று வழிபாடியற்றி அம்மன் பக்தராகியிருந்தார்.

இவ்வாலயங்களில் இரவிலோ பகலிலோ நடைபெறும் பூசைகளில் இவர் கலந்து வருவதை நான் அவதானிக்க நேர்ந்தது. தமிழ் மக்களும் இவரை மிக்க மரியாதையுடன் நடத்துவதையும் கண்டிருக்கிறேன். இவர் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்திக் கொண்டுள்ள நட்புறவைக் குறிப்பிடுவதுடன் எனது சுயாதீனமான இவ்வறிக்கையினை- மிக்க மரியாதையுடன்- பின் வரும் சில வார்த்தைகளுடன் சமர்ப்பிக்கிறேன்:

உடன்பாடெதுவுமில்லாமல் கைதாகி காணாமல் போய்விட்ட பலருடைய விபரங்களை விசாரித்தறிய ஏற்படுத்தப்பட்ட விசாரணைக் குழுவுக்குப் பொறுப்பாகக் கடமையேற்றிருக்கும் தங்களுக்கு, சத்துருக்கொண்டான் கண்ணகி அம்மன் பத்தினி அம்மனுடைய கருணை எப்போதும் பொழிய வேண்டுகிறேன்.

அம்மன் ஆலயத்தின் அருகிலுள்ள குளத்தருகில் தங்கள் உயிர்களை இழந்தவர்களை நினைவுகூரும் ஒரு நினைவுச் சின்னத்தை சிறிலங்கா அரசாங்கம் அமைக்கவேண்டும். இந்த எண்ணம் அப்பகுதியில் வாழும் மக்களின் கருத்தில் தோன்றியதாகும்; இருப்பினும் எனது எண்ணமும் அதுவாகவே உள்ளது.

ஒப்பம்: பற்றீஷியா லோறன்ஸ்



# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# தெரு ஓரத்தில் உயிருடன் எரிந்தனர்

## அம்பாறையில்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமல்ல, கிழக்கில் அம்பாறை மாவட்டத்திலும் தமிழர்கள் மீது படுகொலைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

அம்பாறையை தமிழர் தாயகத்தில் இருந்து பிரித்தெடுக்கும் திட்டத்தின் ஒருபகுதியாக அங்குள்ள தமிழர்களை விரட்டியடிக்கும் ஆக்கிரமிப்பு எண்ணமும் இக் கொலைகளின் பின்னணியில் இருந்திருக்கலாம்.

அம்பாறை மாவட்ட எம்.பி.களில் ஒருவராக இருந்தவர் பி.தயாரத்ன. வடக்கு-கிழக்குப் பிரிப்பில் தீவிரமாக நின்றதுடன், கிழக்கில் அம்பாறை உட்பட தமிழர் நிலங்கள் பறிக்கப்பட வேண்டும் என்பதிலும் ஆர்வமாக இருந்தவர் தயாரத்ன.

புனர்வாழ்வு அமைச்சராக பதவி வகித்த தயாரத்ன, அம்பாறையில் புனர்வாழ்வு, புனரமைப்பு என்ற பெயரில் சிங்களக் குடியேற்றங்களுக்கு உதவினார். அள்ளிக்கொடுத்தார்.

இரண்டாம் ஈழப் போர் ஆரம்பமான பின்னர் அம்பாறையில் 'பச்சைப் புலிகள்' என்ற பெயரில் படையினர் அத்துமீறல்களில் ஈடுபட்டனர்.

அம்பாறை கொண்டவெட்டுவான் இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட 'பச்சைப் புலிகள்' என்னும் படையினர் மல்வத்தை, மல்லிகைத்தீவு, கணபதிபுரம் போன்ற தமிழ்க் கிராமங்களுக்குள் புகுந்து வெறியாட்டம் நடத்தினார்கள்.

பொதுமக்கள் சிலர் கொல்லப்பட்டனர். ஏனையோர் உயிர் தப்பிக் கொள்வதற்காக வீரமுனை என்ற கிராமத்துக்கு ஓடினார்கள். அங்கு உறவினர் வீடுகளிலும், பாடசாலை கட்டடங்களிலும், கோவிலிலும் தங்கினார்கள்.

## கண்ணில் குத்து

அங்கும் ஆபத்து தேடி வந்தது. 21.06.90 அன்று சம்மாந்துறைக் கிராமம் ஊடாக வீரமுனைக்குள் புகுந்த (பச்சைப் புலிகள்) படையினர் கிராம மக்களை தாக்கினார்கள்.

கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். அதில் பொதுமக்கள் சிலர் காயமடைந்தனர்.

வீரமுனை கிராம மக்களையும், அக்கிராமதுக்குள் புகலிடம் தேடி ஓடி வந்தவர்களையும் ஒரே இடத்திற்கு அழைத்த படையினர், அவர்களில் திடகாத்திரமான 65 இளைஞர்களை தனியாகப் பிரித்தெடுத்தனர்.

அத்தனை இளைஞர்களும் ஆண்டிச் சந்தி என்ற அழைக்கப்படும் வீரமுனைச் சந்திக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அச்சமயம் மல்வத்தையில் இருந்து இரண்டு தமிழ் இளைஞர்கள் சைக்கிளில் வந்தனர்.

அவர்களைப் பிடித்திழுத்த படையினர் அவர்களது சட்டைகளை கழற்றி, அவற்றினால் கைகளை பின்புறமாக கட்டினர். தங்களிடம் இருந்த கத்தியால் அவர்களது கண்களில் குத்தினர்.

கண்களில் இரத்தம் வடிய நின்ற இரண்டு இளைஞர்களையும் ஓடுமாறு கூறினர்.

அவர்கள் ஓடியபோது பின்பக்கமாக நின்று பாறாங்கல்லினால் எறிந்து வீழ்த்தினர்.

அரை உயிருடன் கிடந்த இருவரும் தெரு ஓரத்தில் டயர் போட்டு எரிக்கப்பட்டனர்.

இந்த கொடூரக் காட்சியை கைதான 65 பேரும் தம் கண்களால் பார்த்துக் கொண்டு நின்றனர்.

இரண்டு இளைஞர்களும் எரியுண்ட புகை கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்ட 65 பேரினதும் முகத்தில் படுமாறு நிற்கவைக் கப்பட்டனர்.

உயிருடன் எரிந்து கொண்டிருந்த இரு இளைஞர்களும் 'அம்மா...' என்று முனகியபடியே சாம்பலானார்கள்.

இறுதியாக மாலை 4 மணி அளவில் ஆண்டிச் சந்திக்கு விரைந்த இராணுவப் பொறுப்பதிகாரியினால் 65 பேரும் விசாரணை செய்யப்பட்டனர்.

## தலையாட்டி

லொறி ஒன்றின் முன் இருக்கையின் நடுவே கைகள் கட்டப்பட்ட நிலையில் ஒருவரை கொண்டுவந்தனர்.

அவர் முன்பாக 65 பேரும் நிறுத்தப்பட்டனர். பின்னர் 10 பேர் விடுவிக்கப்பட்டனர். மீதி 55 பேரையும் லொறியின் பின்னால் அடித்தும் உதைத்தும் ஏற்றினார்கள்.

அவர்கள் 55 பேரும் இயக்கத் தொடர்பில்லாத அப்பாவிகள். குடும்பஸ்தர்கள்.

அவர்களில் கணேசமூர்த்தி ஆசிரியரும், கந்தன் என்பவரும் சகோதரர்கள்.

கணேசமூர்த்திக்கு திருமணமாகி ஒருமாதம்கூட ஆகியிருக்கவில்லை.

லொறியில் கொண்டுவரப்பட்டு தலையாட்டியவரின் பெயர் சிவானந்தன். இவர் புலிகளது ஆதரவாளராக இருந்தவர். பின்னர் காரைதீவு அதிரடிப்படை முகாமில் உதவியாளராக வேலைக்கு சேர்ந்தார்.

அன்று கைது செய்து கொண்டு செல்லப்பட்ட 55 பேரும் இன்றுவரை விடுவிக்கப்படவில்லை.

வளதாப்பிட்டியில் உள்ள வீடொன்றில் வைத்து 55 இளைஞர்களும் சுட்டுக் கொல்லப்பட்டதாக பின்னர் கூறப்பட்டது.

இக்காலகட்டத்தில் படையினரால் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் சிலர் முஸ்லிம் தீவிர வாதக்குழுவால் அடித்துக் கொல்லப்பட்டனர்.

## சூடு

புலிகள் இயக்க சம்மாந்துறை முக்கியஸ்தர் ஏ.சி.முகமட். அவரும் படையினருடன் இணைந்து செயற்படத் தொடங்கினார்.

வைத்தியசாலை வீதியில் முகமட்டின் வீடு இருந்தது. அங்கு சென்ற புலிகள் முகமட்டை சுட்டுக் கொன்றனர்.

இச்சம்பவத்தின் பின்னர் சம்மாந்துறை முஸ்லிம் ஊர்க்காவல் படையினர் சிலர் தமிழர்களைத் துன்புறுத்தினர். சம்மாந்துறை தீகவாபி சந்தியில் வைத்து தமிழர்கள் சிலரை அடித்தே கொன்றனர் ஊர்காவல் படையினர்.

சம்மாந்துறை முஸ்லிம் மக்கள் பலர் இச் செயல்களை கண்டித்தபோதும், ஊர்காவல் படையினரை எதிர்த்து எதுவும் செய்ய முடியாமல் இருந்தனர்.

ஒருநாள் இரவு, சம்மாந்துறைக்குள் புகுந்த புலிகள் ஊர்காவற் படையினர்மீது தாக்குதல் நடத்தினர். பூமரத்தடி பள்ளி வாசல் அருகே நின்ற ஊர்காவல் படையினரையும் சுட்டுக்கொன்றனர்.

தாக்குதல் முடிந்து திரும்பும்போது முஸ்லிம் ஒருவருக்கு சொந்தமான கடையொன்றையும் கொள்ளையிட்டுச் சென்றனர்.

இச்சம்பவம் நடைபெற்ற மறுநாள் காலையில் நெல்லிக்காடு என்னும் வயலுக்கு சென்ற கலந்தன் வட்டை விதானை உட்பட சில முஸ்லிம்கள் புலிகளாலும், அவர்களது ஆதரவாளர்களாலும் கத்தியால் வெட்டி காயப்படுத்தப்பட்டனர்.

அதன்பின்னர் முஸ்லிம் ஊர்காவற்படையினரும், முஸ்லிம் தீவிரவாத குழுவும் படையினருடன் இணைந்து வீரமுனைக் கிராமத்தை முற்றுகையிட்டனர்.

ஒரே நாளில் மூன்று முறை இக்கிராமம் சுற்றிவளைக்கப்பட்டது.

200 பேர்வரையான தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இன்னொரு கொடுமையும் நிகழ்ந்தது. வீரமுனை என்ற கிராமத்தில் உள்ள மக்கள் அனைவரையும் கூண்டோடு ஒழிக்கக்கூடிய கொடுமை.

வீட்டுக் கிணறுகளில் நஞ்சு கலக்கப் பட்டது!

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்